# கிறிஸ்துவின் சரீரத்தை *நடைமுறையில்* கட்டியெழுப்புதல்

Transcribed from a message spoken on September 13, 2015 in Chennai

By *R.S.Milton*

### மிக முக்கியமான காரியங்களை ஆராய்ந்துபடித்தல்

வேதத்திலிருந்து நாம் பல கருத்துக்களைப்பற்றி ஆராய்ந்துபார்க்கலாம். ஆனால், சில கருத்துக்கள், சில எண்ணங்கள், மிக முக்கியமானவைகள். ஆயிரக்கணக்கான கருத்துக்களைப்பற்றி நாம் ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால், ஒரு சில கருத்துக்கள், எண்ணங்கள், மிக அடிப்படையானவை; மிக முக்கியமானவை. அது நம் தனிப்பட்ட வாழ்க்கையை மிக அதிகமாகப் பாதிக்கும். எனவே, அப்படிப்பட்ட கருத்துக்களைப் பற்றியும், எண்ணங்களைக்குறித்தும் தேவனுடைய மக்களாகிய நாம் தெளிந்த சிந்தனையுள்ளவர்களாக இருப்பது மிக நல்லது. அதில் ஒன்று சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம்.

அந்நிய பாஷையைப்பற்றிய ஒரு பிரசங்கம்...பரிசுத்த ஆவியில் நிறைவதைப்பற்றிய ஒரு பிரசங்கம்... ஸ்தோத்திரம் பண்ணுவதைப்பற்றிய ஒரு பிரசங்கம்...எப்படி பணக்காரனாவது என்பதைப்பற்றிய ஒரு பிரசங்கம் என்று பலவிதமான கருத்துக்களைப்பற்றி நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்து எடுத்து பேசலாம். இவைகளில் எதுவும் பயனற்றது என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், நம் நேரம் குறைவு. நாம் ஆழ்ந்து படிப்பதற்கும், ஆராய்வதற்கும் செலவிட முடிகிற நேரம் குறைவு என்பதை நாம் எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டும். குடும்பப் பொறுப்புகள், வேலை பொறுப்புகள் என்று பல்வேறு பொறுப்புகள் இருப்பதால் எவ்வளவு படிக்க முடியுமோ படியுங்கள். படிக்கிற சிறிது நேரத்தில் குறைவான மதிப்புடைய காரியங்களைக்குறித்து நாம் படிக்கக்கூடாது. நிறைவான மதிப்புடைய மிக முக்கியமான காரியங்களைப்பற்றி மட்டுமே படிப்பதற்கு நாம் நம் நேரத்தையும், மனதையும் செலவிட வேண்டும். சில சமயங்களில் மதிப்பு குறைவான காரியங்களைப்பற்றி படிப்பதற்கு நம் மனதையும், நேரத்தையும் செலவிடுவது ஆபத்தாக மாறிவிடும். ஏனென்றால், மிக முக்கியமான காரியங்கள் இருக்க நாம் அந்நிய பாஷை பேசுவது எப்படி என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதால் என்ன இலாபம்?

நான் இப்படிப்பட்ட செய்திகளை கேட்டிருக்கிறேன். “அந்நிய பாஷை எப்படிப் பேச வேண்டும் என்றால் நாம் நம் வாயை நன்றாய்த் திறக்க வேண்டும்; வாயைத் திறந்து நாக்கை இலேசாக, இலகுவாக, உங்கள் நரம்பு மண்டலத்தை இலகுவாக வைத்துக்கொள்வதுபோல, உங்களுடைய வாய் நாக்கு இவைகளெல்லாம் இலகுவாக வைத்தால்தான் அந்நிய பாஷை பேச முடியும்,” என்று வெளிநாட்டிலிருந்து வந்து பழக்குவித்த நபர்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன்.

இது உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றலாம். என்ன ஆகிவிடும் என்றால் நம் நாள் குறைவு, நேரம் குறைவு. வாரத்திலே ஒரு நாள் கிடைக்கிறது. அந்த நாளிலே “ஒருவன் அந்நிய பாஷை பேசுவது எப்படி?” என்று இப்படி 2 மணி நேரம் தேவனுடைய மக்களுக்குப் பயிற்றுவித்தால் அது அவனுடைய வாழ்க்கைக்கு எந்த விதத்திலாவது பயனுள்ளதாக இருக்குமா? ஒரு கணவன் மனைவி பிள்ளைகளாக வாழ்கின்றவர்கள் நேர்த்தியான வாழ்க்கை வாழ்வதற்கு அது பயன் தருமா அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் போராட்டங்களைச் சந்திப்பதற்கும், வெல்வதற்கும் அது உதவி செய்யுமா அல்லது அவர்கள் தேவனுடைய சித்தத்தை அல்லது தேவனுக்குப் பயனுள்ளவர்களாக இருப்பதற்கு அது உதவி செய்யுமா அல்லது வேலை பார்க்கிறவர்களிடத்தில் ஒரு சாட்சியைக் காத்துக்கொள்வதற்கு அது பயன் தருமா? இவைகளைப்பற்றி யோசிக்க வேண்டும். இது ஒரு முன்னுரைதான்.

ஆகவே மிக விலையேறப்பெற்ற, மிக முக்கியமான, காரியங்களைப்பற்றி மட்டுமே ஆழ்ந்து படிப்பதற்கும், ஆராய்வதற்கும் நம் நேரத்தைச் செலவிட வேண்டும் என்று நான் உங்களுக்கு ஆலோசனையாகச் சொல்லுகிறேன்.

### எல்லாரும் ஆராய்ந்துபடித்தல்

இரண்டாவது, இப்படி மிக முக்கியமான காரியங்களையும், கருத்துக்களையும்பற்றி ஆழ்ந்துபடிப்பதும், ஆராய்வதும் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய காரியம் இல்லை. நாம் எல்லாரும் வேத பண்டிதர்கள்

என்று நான் நினைக்கவில்லை. அதே சமயத்தில் நாம் வேதத்தைப்பற்றிய அறிவே இல்லாதவர்கள் என்றும் நான் நினைக்கவில்லை. மனது வைத்தால் வேதத்திலே ஒரு குறிப்பிட்ட காரியத்தைப்பற்றி, கருத்தைப்பற்றி, நாம் புரிந்துகொள்ள முடியுமா, முடியாதா? மனது வைத்தால் முடியும். போதுமான அளவுக்கு நேரமும், சிரத்தையும், உழைப்பும் இருந்தால் ஒரு குறிப்பிட்ட காரியத்திலே தேவனுடைய மனம் என்ன, தேவனுடைய எண்ணம் என்ன, தேவனுடைய இருதயம் என்ன என்பதைப்பற்றி நிச்சயமாய் நாம் புரிந்துகொள்ள முடியும்.

பெரும்பாலும் நாம் எங்கே தவறுவோம் என்றால் அப்படி தேவனுடைய எண்ணமும், மனமும், இருதயமும் என்ன என்பதைப்பற்றி அறிவதற்கும், ஆழந்து படிப்பதற்கும், ஆராய்வதற்கும் போதுமான அளவிற்கு நாம் நேரம் செலவிட மாட்டோம்; போதுமான அளவிற்கு சிரத்தை இருக்காது. வேலைபார்க்கிற இடத்திலே ஓர் அழுத்தம் வரும்; வேலைபார்க்கிற நேரத்தில் மட்டுமல்ல வேலைபார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தாலும் அந்த அழுத்தம் நம் மனதிலே இருக்கும். அப்படியிருக்கும்போது, “ஓ! தேவனுடைய இந்தக் காரியத்தைக்குறித்து நான் படித்து, ஆழ்ந்துபடித்து, ஆராய்ந்து ஒரு தெளிவையும், ஒரு முடிவையும் பெற விரும்புகிறேன்,” என்றால் எப்படி நம் மனதைச் செலுத்த முடியும்? நேரத்தை விடுங்கள். மனதிலே அழுத்தம் குடிபுகுந்துவிட்டது என்றால் எந்தக் காரியத்திலும் மனதைச் செலுத்த முடியாது. பல சமயங்களில் நாம் “நேரம் இல்லை” என்று சொல்வதினுடைய பொருள் என்ன தெரியுமா? “நேரம் இல்லை” என்று நாம் பொய் சொல்லவில்லை. ஆனால், உண்மையாகவே நாம அப்படிச் சொல்லும்போது எதைக் குறிப்பிடுகிறோம் என்றால் “என்னால் மனதைச் செலுத்த முடியவில்லை; ஏனென்றால், என் மனம் பல்வேறு காரியங்களால் அழுத்தப்பட்டு, அவைகளில் சிக்குண்டு இருக்கிறது. எனவே, அந்தக் காரியங்களைப்பற்றிச் சிந்திப்பதற்கு, என் மனதை வெளியே கொண்டுவந்து, இந்தக் காரியங்களுக்கு என்னால் என் மனதைச் செலுத்த முடியவில்லை,” என்பதற்குச் சமானம். இதற்குச் சமானமாகத்தான், “எனக்கு நேரமில்லை,” என்று சொல்லுவோம். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நான் அதைப் புரிந்துகொள்கிறேன்.

ஆகவே, சில எண்ணங்களை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ளும்போது இதை நீங்கள் ஒரு செய்தியாக, பிரசங்கமாக, தயவுசெய்து எடுத்துக் கொள்ளாதீர்கள். நான் ஒன்றும் 24 மணி நேரமும், 7 நாட்களும் தேவனுடைய வார்த்தையில் நேரம் செலவிடுவது இல்லை. உங்களைப்போலவே நானும் ஒரு வேலைக்குப் போகிறேன். தேவனுடைய வார்த்தையைப்பற்றி ஆழ்ந்து படிப்பதற்கும், ஆராய்வதற்கும் நீங்கள் எப்படி நேரம் ஒதுக்குவதற்குப் போராட வேண்டியுள்ளதோ, அதேபோல் நேரம் ஒதுக்குவதற்கு நானும் போராட வேண்டியுள்ளது. ஆனால், என் நம்பிக்கை என்னவென்று கேட்டால் இப்படிப்பட்ட பல மட்டுப்பாடுகளும், பல கட்டுப்பாடுகளும் உள்ள தேவனுடைய மக்களாய் நாம் இருந்தபோதும் நாம் எல்லாரும் சேர்ந்து, இதை ஆழ்ந்து படித்து, ஆராய்ந்து பார்ப்போமென்றால், நாம் படித்ததை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்வோமென்றால், எந்த காரியத்தைக்குறித்தும் ஒரு தெளிவுக்கும், ஒரு முடிவுக்கும் வரலாம். இதை நான் நம்புகிறேன். தனிப்பட்ட விதத்தில் நம்மில் யாருக்கும் படிப்பதற்கு 6 மணி நேரம் இல்லை. ஆனால், நம் எல்லாருக்கும் ஒரு அரைமணி நேரம் இருக்கிறது என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். நாம் முப்பதுபேரும் சேர்ந்து அதைப் படித்து, நாம் படித்த காரியங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்து, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கிறோம் என்றால் “கிறிஸ்துவின் சரீரம் என்றால் என்ன, சபை என்றால் என்ன, நடைமுறையில் கிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றிய காரியம் என்ன?” என்பதை நாமெல்லாரும் விளங்கிக்கொள்ள முடியும். தயவு செய்து நீங்கள் ஒத்துழையுங்கள்.

## குருமரபினர், பொதுநிலையினர் கோட்பாடு

இதுபோன்ற காரியங்களைச் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட சாராரை நாம் முன்னரே பதிவுசெய்து வைத்துவிடுவது; வேதத்தை ஆழ்ந்து படித்து ஆராய்வதற்கு ஒருசிலரை நாம் முன்னரே பதிவுசெய்து வைத்துவிடுவது. இது அவர்களுடைய தொழில். நம்மில் யாருக்காவது ஒரு தேவை உண்டு என்றால் அவர்களை விசாரிப்பதும், அந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்வதும் யார் செய்வார்? அந்த ஒரு சாரார் செய்வார்கள். இது ஒரு மதகுணம்; இது மதத்தைப்பற்றிய ஒரு பண்பு; மதத்தைப்பற்றிய ஒரு குணம். அது தேவனுக்குரியது அல்ல என்று நாம் அதைவிட்டு வெளியே வந்துவிட்டோம். இதுதான் குருமரபினர் பொதுநிலையினர் என்ற பிரிவு. வேதத்தை ஆழ்ந்து படிப்பது, வேதத்தைப் போதிப்பது, தேவையுள்ள மக்களைச் சந்திப்பது, அவர்கள் தேவைகளைப் பூர்த்திசெய்வது, திருமணம் பண்ணி வைப்பது,

பிறந்தநாள் கூட்டங்களை நடத்துவது... இவைகளெல்லாம் செய்பவர்கள் குருமரபினர், குருக்கள். பொது நிலையினர் என்ன செய்வார்கள் என்றால் குருக்கள், ஆசாரியர்கள், கூட்டங்களை நடத்தும்போது இவர்கள் உட்கார்ந்திருப்பார்கள்; தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுப்பார்கள் அல்லது சிறிய சிறிய வேலைகளைச் செய்வார்கள். இது யாருடைய நிலை? பொதுநிலையினருடைய நிலை. இந்தக் கோட்பாடு தேவனுக்கு உரியதல்ல என்று தெரிந்து, இந்தக் கோட்பாட்டை நாம் புறக்கணித்திருக்கிறோம். இல்லையா? இந்தக் கோட்பாட்டை நாம் புறக்கணித்திருக்கிறோமா அல்லது நம்மிடையே குருமரபினர் பொதுநிலையினர் என்ற வேறுபாடு அல்லது பிரிவு உள்ளதா? இல்லை.

தேவன் தம் மக்கள் எல்லாரையும் ஆசாரியத்துவத்திற்கென்று அழைத்திருக்கிறார் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. "தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக் கினார்" (வெளி. 1:6) என்று திருவெளிப்பாட்டிலும், "நீங்களோ...தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும்...இருக்கிறீர்கள்" என்று (1 பேதுரு 2:9) வாசிக்கிறோம். இது புதிய ஏற்பாட்டினுடைய சாரம். தேவனுடைய மக்கள் எல்லாரும் தேவனை சேவிக்க வேண்டும். தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவிலே விசேஷமான சில மனிதர்கள் பாலம் அமைக்க வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டிலே தேவனுடைய எண்ணம் இல்லை. தேவனுக்கும் மனிதனுக்கும் பாலமாக இருக்கிறவர் ஒரேவொரு நபர்தான். அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. வேறு எந்த நபரும் தேவனுக்கும் மனித னுக்கும் இடையிலே பாலம் கட்டுகிற நபராக இருக்கவேண்டிய அவசியமில்லை.

ஆகவே, ஞாயிற்றுக்கிழமை கூடுகைகளில் நான் பகிர்ந்துகொள்கின்ற இந்த செய்திகளை நீங்கள் தயவு செய்து பாடங்களாக எடுத்துக்கொள்ளுங்கள். நம் மதமரபிலே அது இல்லை. நாம் கோவிலுக்குப் போகும்போது பாடம் படிப்பதற்கும், குறிப்பு எடுத்துக்கொள்வதற்கும் போவது கிடையாது. கோவிலுக் குப் போவது எதற்கென்றால் கோவிலுக்குப் போகவேண்டும், அவ்வளவுதான். அங்கே குறிப்பு எடுப்பது, எடுத்த குறிப்பை மறுபடியும் வீட்டுக்கு வந்து படிப்பது, ஆழ்ந்து படிப்பது, ஆராய்வது, 'காரியங்கள் இப்படி இருக்கிறதா' என்று வேதவாக்கியங்களோடு ஒப்பிட்டு பார்ப்பதுபோன்ற காரியங்களெல்லாம் நம் மதமரபிலே, மதபாரம்பரியத்திலே, இல்லை. நாம் இந்த மதபாரம்பரியத்திற்கு விலக்கானவர்கள் அல்ல. இன்னும் அந்த மதபாரம்பரியங்களைவிட்டு வெளிவருவதற்காக நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். யாரோடு? நம்மோடு போராடிக்கொண்டிருக்கிறோம். நாம் ரோமன் கத்தோலிக்கர்களோடோ, ஆங்கிலிக் கன்சோடோ பெந்தேகொஸ்தே சகோதரர்களோடோ நாம் போராடவில்லை. போராட்டம் யாரோடு? என் னோடு, என் மதப்பாரம்பரியங்களோடு நான் போராடிக்கொண்டிருக்கிறேன்.

ஆகவே, நீங்கள் சிரத்தையாக குறிப்பு எடுத்துக்கொள்ளுங்கள். குறிப்பு எடுத்தபிறகு, இந்த வாரத்திலே ஒருமுறையோ, இருமுறையோ, மூன்று முறையோ இதை மீண்டும் ஆழ்ந்து படிப்பதற்கு நேரம் ஒதுக் குங்கள். நான் நேரம் ஒதுக்குகிறேன். நீங்களும் நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் நேரம் ஒதுக்குவீர்களென் றால் அடுத்த வாரம் நாம் கூடிவரும்போது படித்ததை சற்று ஒழுங்குபடுத்தி சொல்வதற்காவது உங்க ளால் முடியும். நான் அதை எதிர்பார்க்கிறேன். அடுத்த வாரம் நீங்கள் வரும்போது புதிதாக எதையும் சொல்லவேண்டிய அவசியமில்லை. நாம் இப்பொழுது படிக்கிற இந்தக் காரியத்தை நீங்கள் திரும்பப் படித்துப் பார்த்து, நீங்கள் பெற்ற புரிந்துகொள்ளுதலை, நீங்கள் பெற்ற வெளிச்சத்தை, எல்லாரும் பகிர்ந்துகொள்ளுங்கள். இந்த ஆண்டு முடிகிறவரை அதை நீங்கள் செய்யலாம்.

சில சமயங்களில் நான் இப்படி யோசிப்பேன். "கிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றி, சபையைப்பற்றி, இந்த இருபது நூற்றாண்டுகளிலே நாம்தான் முதலாவது ஆராய்ச்சி செய்கிறோமா? நமக்கு முன்னால் ஆராய்ச்சிசெய்தவர்களே இல்லையா?" நமக்குமுன்பாக ஆராய்ச்சிசெய்த தேவனுடைய மக்கள் உண்டு. திடுதிப்பென்று இந்த ஆராய்ச்சியை நாம் ஆரம்பித்துவிடவில்லை. குறிப்பாக பிரதரன் அல்லது பிரதரன் என்று அழைக்கப்படுகின்ற சகோதரர்கள் இதைக் குறித்து பெரிய ஆராய்ச்சி செய்திருக் கிறார்கள். ஆராய்ச்சிசெய்து ஆயிரம் துண்டுகளாக பிரிந்து ஒருவரையொருவர் சபையைவிட்டு விலக்கு வதும், தள்ளுவதும், குற்றஞ்சுமத்துவதும், மறுகுற்றஞ்சுமத்துவதுமாக வாழ்ந்தார்கள்.

**கிறிஸ்துவின் சரீரத்தில் தலைமைத்துவம்**

சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம் என்பது மனிதன் தன் மாம்சத்தைப் புகுத்துவதற்கு அல்லது தன் மாம்சத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு மேடை அமைத்துக்கொடுக்கிற வாய்ப்பு அங்கே இருக்கிறது. 1

பேதுரு 5ஆம் அதிகாரம் இந்த வசனங்களிலே தலைமைத்துவத்தைப்பற்றிச் சொல்லும்போது “நீங்கள் மந்தையை இறுமாப்பாய் ஆளுகைசெய்யாமல் மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்புச் செய்யுங்கள்,” என்று பேதுரு சொல்கிறார். இறுமாப்பாய் ஆளுகிற வாய்ப்பு எப்போதுமே அங்கு இருக்கிறது. ஒரு மனிதன் தன் பேர், புகழ், பெருமை, செல்வாக்கு, அதிகாரம் ஆகியவைகளுக்காக தேவனுடைய சபையை, கிறிஸ்துவினுடைய சரீரத்தை, பயன்படுத்திக்கொள்கிற வாய்ப்பு இருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது. இதிலே எந்த சந்தேகமுமே இல்லை. இன்னும் சொல்லப்போனால் தேவனுடைய மக்க ளிடையே பரவலாக காணப்படுகின்ற ஒரு தொற்று வியாதி அது. தேவனுடைய சபையை அல்லது கிறிஸ்துவின் சரீரத்தை ஒரு மனிதன் தன் பேர், புகழ், பெருமை, செல்வாக்கு, அதிகாரம் இவைகளுக் காகப் பயன்படுத்திக்கொள்வது. இந்த ஆபத்து நாம் சாகும்வரை நமக்கு உண்டு அல்லது கர்த்தரை நாம் சந்திக்கிறவரை நமக்கு உண்டு. ஆகவே நாம் இந்த ஆபத்தைக்குறித்து எப்போதுமே எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்.

அதனால், தலைமைத்துவம் அல்லது நடத்துவது என்பதே அவசியமில்லை என்கிற அந்த அற்றத்திற்கு நாம் போவோமா? அது தவறு. தேவனுடைய மக்களிடையே நடத்துகின்றவர்கள் அல்லது பொறுப்பு எடுக்கின்றவர்கள் அல்லது தலைமைத்துவம் எடுக்கின்றவர்கள் எப்போதுமே அவசியம். தலைமைத்துவத் தின் தன்மையை, பண்பை, இயற்கையைக்குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஆனால், தலைமைத்துவம் இல்லாத ஒரு வீடு...ஒரு கணவன் அல்லது ஒரு தந்தை குடும்பத்திலே தலைமைத் துவம் எடுக்கவில்லையென்றால் அது ஒரு தாறுமாறான நிலைக்குப் போய்விடும். அது தேவனுடைய திட்டம் அல்ல. “உங்கள் வீட்டிலே யார் தலைவர்?” என்று கேட்டால், “எங்கள் வீட்டிலே யாருமே தலை வர் இல்லை. ஏனென்றால் எங்கள் வீடு அன்பால் நிறைந்த வீடு. யாருமே தலைவர் கிடையாது. என் மனைவியும் தலைவர்தான். நானும் தலைவர்தான்,” என்று சொல்வது அல்லது “நானும் தலைவன் இல்லை; என் மனைவியும் தலைவனில்லை. என மகளும் தலைவன் இல்லை. என் மகனும் தலைவன் இல்லை,” என்றால் அதுவும் தவறு. ஒரு குடும்பத்திலே இருக்கிற உறுப்பினர்களெல்லாம் ஒருவரோ டொருவர் அன்பாயிருக்கிறார்கள் என்பதற்காக அந்தக் குடும்பத்தை நடத்துகிறவனோ அல்லது தலைமைத்துவமோ இல்லை என்பதல்ல பொருள்.

ஒன்றை நன்றாய்க் கவனிக்க வேண்டும். என்னமோ தலைமைத்துவப்பற்றிய ஒரு பெரிய நெருக்கடி வந்துவிட்டது என்று நினைத்துவிடாதீர்கள். “தலைமைத்துவத்தைப்பற்றிய ஒரு பெரிய நெருக்கடி வந்து விட்டது; அதனால் சகோதரன் அதைச் சரிசெய்கிறார்,” என்று நினைத்துவிடாதீர்கள..அப்படியல்ல. “நாங்கள் தலைமைத்துவத்திற்கு எதிரானவர்கள் அல்ல; நடத்துகிறவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல,” என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக நான் இதைச் சொல்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தேவ னுடைய மக்கள் எல்லாரும் நடத்துகிற பொறுப்பை எடுக்க வேண்டும் என்பதுதான் நம் ஆவல். இப் படிப்பட்ட சில கேள்விகள், ஐயங்கள், சந்தேகங்கள், குழப்பங்கள் எல்லாம் தேவனுடைய மக்களிடையே இருப்பதினாலே நாம் இதை ஆழ்ந்துபடித்து, ஆராய்ந்துபார்த்து ஒரு தெளிவையும், ஒரு முடிவையும், ஒரு துணிவையும் பெறுவது நமக்கு மிகவும் அவசியம்.

ஆகவே, போன வாரம் சொன்னதுபோல நாம் ஒரே நாளிலே இதைப் பேசி முடித்து விடுவதில்லை. தொடர்ந்து நாம் இதைப் பேசலாம். இன்றைக்கும் நான் இதைத் தொடர்ந்து பேச விரும்புகிறேன். *கிறிஸ்துவின் சரீரத்திலே பொறுப்புள்ளவர்களாக இருப்பது.* இதைப்பற்றி நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கிறிஸ்துவின் சரீரத்திலே பொறுப்புள்ளவர்களாக இருப்பது.

**சபைக்கும், குடும்பத்துக்கும் பொருந்தும்**

இன்னொன்றை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கிறிஸ்துவின் சரீரம் என்றவுடனே “ஓ! இது கிறிஸ்துவின் சரீரத்திலே அல்லது தேவனுடைய சபையிலே பொறுப்புள்ளவர்களாய் இருப்பதைப்பற்றித் தான் பேசுகிறோம். குடும்பத்திலே பொறுப்புள்ளவர்களாய் இருப்பதைப்பற்றி இது பேசவில்லை,” என்று நினைத்துவிடாதீர்கள். நாம் ஆழ்ந்துபடிக்கின்ற, ஆராய்ந்துபார்க்கின்ற, காரியங்களெல்லாம் தேவனுடைய சபைக்கு மட்டுமல்ல, குடும்பத்துக்கும் பொருந்தும். இன்னும் சொல்லப்போனால், பவுல் தீமோத்தேயு வுக்கு எழுதும்போது, “ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை விசாரியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?” என்று எழுதுகிறார். ஆகவே, தேவனுடைய சபைக்கும் குடும்பத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. *தேவனுடைய சபை என்பது ஒரு குடும்பத்தைப்போன்ற பெரிதான குடும்*

*பம். குடும்பம் என்பது தேவனுடைய சபையை போன்ற சிறிதான ஒன்று. பெரிதான குடும்பம் தேவ னுடைய சபை. சிறிதான தேவனுடைய சபை குடும்பம்.* ஆகவே கோட்பாடுகள் இங்கும் அங்கும் ஒன்று தான். இதை நன்றாய் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு மனிதன் அல்லது ஒரு மனுஷி அவர்களுடைய எதிர்காலத்திலே எப்படிப்பட்ட ஒரு குடும்பத்தை அமைக்கப்போகிறான், அமைக்கப்போகிறாள் என்பது பெரும்பாலும் தேவனுடைய சபையிலே இன்று அவர்கள் எப்படி பொறுப்புகளைச் சுமக்கின்றார்கள் என்பதிலிருந்து நாம் பெரும்பாலும் சொல்லி விட லாம்.

வசனங்களை வாசிப்பதற்கு வழக்கம்போல நமக்கு நேரம் போதாது. ஆனால், வசனங்களை நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டும் என்பதிலே மிகவும் குறியாக இருக்கிறேன். ஏனென்றால், இதை நாமெல் லாரும் சேர்ந்து படித்தால்தான் ஒரு தெளிவுக்கு வர முடியும். வாராவாரம் தேவனுடைய வார்த்தையி லிருந்து ஓர் எண்ணத்தை, ஒரு செய்தியை, பகிர்ந்துகொள்வதிலே எனக்கு அசாத்தியமான நம்பிக்கை உண்டு. "பிரதர், போன வாரம் கேட்ட செய்தி இந்த வாரம் ஞாபகம் இல்லை; போன மாதம் கேட்ட செய்தி இன்றைக்கு ஞாபகம் இல்லை. போன வருடம் கேட்ட செய்தி இன்றைக்கும் ஞாபகம் இல்லை. அதனால் செய்திகளைக் கொடுப்பதினால் என்ன பயன்?" என்கிற ஒரு மனப்பாங்கு தேவனுடைய மக்களிடையே உண்டு. ஒரு பக்கம் தேவனுடைய வார்த்தையிலிருந்து செய்திகளைக் கொடுப்பது மதப் பழக்கமுள்ளவர்கள் கதாகாலச்சேபம் செய்வதுபோல இருக்கிறது.

## கிறிஸ்துவின் சரீரம்

முதலாவது *'தேவனுடைய சபை', 'கிறிஸ்துவின் சரீரம்'* என்றவுடனே இந்தப் பதங்களையெல்லாம் பெரிய தொழில்நுட்ப வார்த்தைகள்போல நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். "தேவனுடைய சபை அல் லது கிறிஸ்துவின் சரீரம். அதில் உள்ளூர் சபை, உலகளாவிய சபை என்ற இரண்டு அம்சங்கள் உள் ளன. சபையிலே ஐந்து கொடைகள் உள்ளன. அவர்கள் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர், மேய்ப்பர்" என்று பகட்டான வார்த்தைகளில் உபதேசரீதியில் நாம் இதைப் பேசவேண்டிய அவசியம் இல்லை. "தேவனுடைய சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம் என்பது எங்கேயோ இருக்கிறது! இது ஒரு கருகலான கருத்துபோல் இருக்கிறது," என்று நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

நம்மோடு தொடர்புடைய சகோதர சகோதரிகள்தான் தேவனுடைய சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம். நம்மைச் சுற்றியிருக்கின்ற, நம்மோடு தொடர்புடைய, நம்மோடு உறவுள்ள தேவனுடைய மக்களால், சகோதர சகோதரிகளால் ஆனதுதான் கிறிஸ்துவின் சரீரம், தேவனுடைய சபை. நம்மோடு தொடர்புள்ள, நம்மோடு உறவுள்ள தேவனுடைய மக்களைப்பற்றி முதலாவது ஒரு காரியம் தெரிய வேண்டும், அதா வது நடைமுறையில் *பிறரைப்பற்றிய உணர்வு அல்லது எண்ணம்* வேண்டும்.

## கிறிஸ்துவின் சரீரத்தின் நடைமுறைக் குறிப்புகள்

படிப்பதற்கு இப்படிப்பட்ட சில குறிப்புகள் தேவை. வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்போது குறிப்பு களைவைத்து நாம் நடைமுறைப்படுத்துவது இல்லை. குறிப்புகளைப்பற்றி நாம் கவலைப்படுவதும் இல்லை. ஆனால், படிப்பதற்கு குறிப்புகள் தேவை. படித்தபிறகு வாழ்க்கையில் அதைச் செயலாக்கும் வேலையைப் பரிசுத்த ஆவியானவர் செய்வார். முதலாவது, *பிறரைப்பற்றிய உணர்வு அல்லது எண் ணம்.* இரண்டாவது, *பிறருக்கான பொறுப்பு அல்லது பிறருக்காக பொறுப்புகள்.* மூன்றாவது, *பிறருக் கான கொடைகள்.* நான்காவது, *பிறருக்கான உக்கிராணத்துவம்.* ஐந்தாவது, *வெகுமதி...பிறருக்கான வெகுமதி அல்ல; நமக்கான வெகுமதி.* பிறர் என்று நான் பயன்படுத்துகிற வார்த்தைக்குப்பதிலாக கிறிஸ்துவின் சரீரம், தேவனுடைய சபை, தேவனுடைய வீடு என்று எந்த வார்த்தை வேண்டுமானாலும் நீங்கள் பயன்படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தினால் ரொம்ப technicalஆக மாறிவிடும். *கிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றிய உணர்வு, கிறிஸ்துவின் சரீரத்தில் நம் பொறுப்பு, கிறிஸ்துவின் சரீரத்திற்கான நம் கொடைகள், கிறிஸ்துவின் சரீரத்தில் நம் உக்கிராணத்துவம்* என்று சொன்னவுடனே இது ரொம்ப technical செய்தியாக மாறிவிடும். கிறிஸ்துவின் சரீரம் என்கின்ற வார்த்தையை எடுத்துவிட்டு *மற்றவர் களுக்கான, பிறருக்கான, தேவனுடைய மக்களுக்கான, பரிசுத்தவான்களுக்கான, சகோதர சகோதரிகளுக் கான* என்கிற ஒரு வார்த்தையைப் போடும்போது அது மிகவும் நடைமுறைக்குரிய ஒன்றாக மாறும்.

## 1. பிறரைப்பற்றிய உணர்வு

முதலாவது நான் மேற்கோள் காட்டவிரும்புகிற ஒரு வாக்கியம். 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரம் இதை நமக்கு தெள்ளத் தெளிவாக்குகிறது. நாம் தனிப்பட்டவர்களல்ல; நாம் கிறிஸ்துவின் சரீரத்திலே பகுதி களாக அவயவங்களாக இருக்கின்றோம். தேவன் நம்மை கிறிஸ்துவின் சரீரத்திலே பகுதிகளாக, அவ யவங்களாக, அமைத்திருக்கிறார் என்று 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம். இதில் குறிப்பான சில வசனங்களை நான் மேற்கோள்காட்ட விரும்பினாலும், முழு அதிகாரத்தையும் நீங்கள் வாசிக்க வேண்டும். **"நாம் தனிப்பட்டவர்களல்ல. கிறிஸ்துவின் சரீரத்திலே தேவன் நம்மைப் பகுதிகளாக, அவயவங்களாக, உறுப்புகளாக அமைத்திருக்கிறார்".** "நான் விரும்பினால் கிறிஸ்துவின் சரீரத்தின் ஓர் அவயவமாக இருக்கலாம்; எனக்கு அதிலே விருப்பமோ, ஈடுபாடோ, சாய்மானமோ இல்லையென்றால் கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அவயவமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை," என்று தேர்ந்தெடுக்கும் உரிமையை தேவன் நமக்குத் தரவில்லை. நாம் தேவனுடைய பிள்ளைகளென் றால் அவர் நம்மை கிறிஸ்துவின் சரீரத்திலே அவயவங்களாக அமைத்திருக்கிறார். அவ்வளவுதான். இது உங்களுக்கு விளங்குகிறதா? முதலாவது, நாம் தேவனுடைய பிள்ளைகள். பத்து வருடம் கழித்து நாம் வளர்ந்தபிறகு கிறிஸ்துவின் சரீரத்திலே நாம் அவயவங்களாக மாறுகிறோமா அல்லது நாம் என்றைக்குத் தேவனால் மீண்டும் பிறக்கிறோமோ அன்று, அந்தக் கணத்திலிருந்து நாம் கிறிஸ்துவின் சரீரத்திலே அவயவங்களாக இருக்கிறோமா? அந்தக் கணம்தொடங்கி நாம் கிறிஸ்துவின் சரீரத்திலே அவயவங்க ளாக இருக்கிறோம். "சிலர் தேவனுடைய பிள்ளைகள்; வேறுசிலர் கிறிஸ்துவின் சரீரத்திலே அவய வங்கள்," என்று இரண்டு சாரார் இல்லை.

நான் மிகவும் எச்சரிக்கையாக இருக்க விரும்புகிறேன். ஏனென்றால், ஒருபக்கம் ஏதோ விளையாட்டுப் பிள்ளைகள்போல நாம் வாழ்ந்து முடித்து இந்த உலகத்தைவிட்டு கடந்துபோய்விடக் கூடாது என்கின்ற ஓர் அச்சம் எனக்கு எப்போதுமே உண்டு. நாம் தேவனுடைய பிள்ளையாய் வாழும்போது உண்மையி லேயே தேவனுடைய பிள்ளைகள் எல்லாருடைய வாழ்க்கையும் ஒரு முழுமையான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும், மலர்ச்சியையும், கனியையும் கொடுக்க வேண்டும் என்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். "நம்மோடு தொடர்புடைய தேவனுடைய மக்கள் நம்மோடு தொடர்புகொள்வதற்குப் பதிலாக வேறு யாரோடாவது தொடர்பும், உறவும் வைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் வாழ்க்கை யிலே மிகுந்த பலன் உண்டாயிருக்கும், மிகுந்த கனி உண்டாயிருக்கும்; நம்மோடு தொடர்பு வைத்திருந் ததால் அந்தப் பலனும், கனியும் அவர்களுக்கு உண்டாகவில்லை," என்கிற துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்படக்கூடாது. இதைக்குறித்து நான் எச்சரிக்கையாக இருக்க விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் நம்மோடு உறவுவைத்திருப்பதாலும், நம்மோடு தொடர்பு கொள்ளும்படி வருவதாலும் அவர்களுடைய வாழ்க்கை நிஜமாகவே மலர்வதையும், முழுமையான அர்த்தமுள்ளதாக மாறுவதையும் நாம் உணர வேண்டும். "நம்மோடு தொடர்புகொள்வதற்குப்பதிலாக அவர்கள் மற்ற கிறிஸ்தவக் குழுக்களோடு தொடர்புகொண்டிருந்தால் அவர்களுடைய வாழ்க்கை மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்திருக்கும்! மிகவும் வீரியமுள்ளதாகவும், கனிதருவதாயும், பலன் தருவதாயும் இருப்பதை உணர்ந்திருக்க முடியும்," என்கிற ஒரு துர்பாக்கியமான நிலைமை நமக்கு ஏற்படக் கூடாது.

### நாம் ஒரே சரீரத்தின் பல அவயவங்கள்

மிகக் குறிப்பாக 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரம் (18 ஆம் வசனம்) "தேவன் தம் சித்தத்தின்படி அவ யவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே அமைத்திருக்கிறார்" என்று சொல்லுகிறது. பிறகு அதே 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரம் (24, 25, 26 ஆம் வசனங்களிலே) "தேவன் கிறிஸ்துவின் சரீரத்திலே எல்லா அவயவங்களையும் அதினதின் இடத்திலும், அளவிலும், விகிதத்திலும், செயலிலும், உறவிலும், தொடர்பிலும் அமைத்திருக்கிறார்; ஏனென்றால் சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு அல்லது அக்கறையாய் இருக்கும்படிக்கு தேவன் அப்படி செய்தார்" என்று கூறுகிறது. தேவனுடைய எண்ணம் என்னவென்றால் கிறிஸ்துவினுடைய சரீரத் திலே நாம் அவயவங்களாய் இருக்கிறோம் என்றால் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கரிசனை யாய், அக்கறையாய் அல்லது உணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

சிலைவழிபாடு செய்கிறவர்களைப் பாருங்கள். ஒரு சிலலைக்குமுன்னால் போய் நிற்பார்கள். அந்த சிலையை ஆராதிப்பதற்காக பூ, பழம், ஊதுபத்தி, தேங்காய் என்று ஆராதனைப் பொருட்களை வைத்

திருப்பார்கள். அவர்களுடைய இருதயம் வழிபாடு செய்ய வந்திருக்கிற முன்னால் நிற்கிறவரைப் பற்றியோ அல்லது பின்னால் நிற்கிறவரைப்பற்றியோ அல்லது இடதுபக்கம் நிற்கிறவரைப்பற்றியோ அல்லது வலதுபக்கம் நிற்கிறவரைப்பற்றியோ இருக்குமா? "ஐயோ! அவர்களுடைய வாழ்க்கையிலே எவ்வளவு தேவைகள், நெருக்கங்கள், அழுத்தங்கள், கதறுதல்கள், கண்ணீர்கள் உண்டு! தேவனே, இவர்கள் தேவைகளையெல்லாம் நீர் பூர்த்திசெய்ய வேண்டும்," என்று அவர்கள் ஜெபிப்பார்களா? அப் படி நான் யாரையும் கேட்கவில்லை. சிலைவழிபாடு செய்கிற மக்கள் தங்களுக்காக, தங்கள் தேவை களுக்காக, தங்கள் நெருக்கங்களுக்காக, தங்கள் நன்மைகளுக்காக ஆசைபட்டு அந்த சிலைக்குமுன் னால் நின்று வழிபடுவார்கள், ஆராதிப்பார்கள்.

துரதிருஷ்டவசமாக, தேவனுடைய மக்கள்கூட இந்தத் தரத்திலிருந்து பலவேளைகளிலே அதற்கு மேலான ஒரு தரத்திற்குப் போவதில்லை. 1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரத்தில் (19 ஆம் வசனம்) "இம் மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் நாம் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" என்று பவுல் கூறுகிறார். இம்மைக்காக மாத் திரம்... இம்மையிலே தேவன் எனக்கு உடல்நலம் தருவார், கணவனைத் தருவார், மனைவியைத் தரு வார், பிள்ளைகளைத் தருவார், வேலையைத் தருவார், பணத்தைத் தருவார், நிலத்தைத் தருவார், வீட் டைத் தருவார், காரைத் தருவார், செல்வாக்கைத் தருவார் என்று இம்மைக்காக மட்டும் கிறிஸ்துவினிடத் தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் நாம் மற்ற எல்லா மனுஷரைப் பார்க்கிலும், அவிசுவாசிகளை விட, நாம் பரிதபிக்கப்படத்தக்கவர்கள். அப்படியென்றால் இந்த உலக நன்மைகளுக்காக, இம்மையில் நன்மைகளுக்காக மட்டுமே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிப்பிடித்திருக்கிற தேவனுடைய மக்களைப்பற்றிய காரியம் என்ன? காரியம் என்னவென்று நான் சொல்லவில்லை; பவுலுடைய வார்த்தை களிலே அவர்கள் "பரிதபிக்கப்படத்தக்கவர்கள". உடனே நான் ஓர் அற்றத்திற்குப் போய்விடவில்லை. தேவன் இந்த உலகத்திற்குரிய நம் நன்மைகளைக்குறித்து கவலையற்றிருக்கிறார் என்று நான் சொல்ல வில்லை. குறைந்தபட்சம் நம் ஐக்கியத்திலே, தேவனுடைய இந்தக் குடும்பத்திலே உள்ள பிள்ளைகள் எல்லாருக்கும் இது தெரியும். தேவன் நம் இந்த உலகத்தின் தேவைகளைக்குறித்து அக்கறையும், கரி சனையும் உள்ளவராக இருக்கிறார். ஆனால், இந்த உலகத்திலே நாம் ஏதோவொரு பெரிய பொருட் டாக வாழ வேண்டும் என்பதல்ல தேவனுடைய இலக்கு.

நாம் ஒருவருக்கொருவர் அவயவங்கள். அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று அக்கறையாயிருக்க வேண்டும். சிலருக்கு இயல்பாகவே மற்றவர்களைக்குறித்து அக்கறை இருக்கிறது. சிலருக்கு இயல்பாக அந்த அக்கறை இல்லை. இதைப்பற்றிய காரியம் என்ன? அது நாம் வாசித்த வசனத்தில் இருக்கிறது. தேவன் அவயவங்களை எப்படி ஓர் இடத்திலும், ஓர் உறவிலும், ஒரு நிலையிலும், ஓர் அளவிலும், ஒரு விகிதத்திலும் வைத்திருக்கிறார் என்றால் ஓர் அவயவம் மற்ற அவயவங்களைக்குறித்து அக்கறையின்றி இருக்க முடியாது. அதற்கு அடுத்த வசனம் சொல்லுகிறது. "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவ யவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும்கூடச் சந்தோஷப் படும்" (1 கொரி. 12:26). "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும்கூடப் பாடுபட வேண்டும்" என்று சொல்லவில்லை. "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும்கூடப் பாடுபடும்" என்று சொல்லயிருக்கிறது. இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. *பாடுபட்டால் நாமும் பாடுபட வேண்டும் என்ப தல்ல தேவனுடைய வார்த்தை. பாடுபட்டால் நானும் பாடுபடுவேன்.*

## விரிவான இருதயம், குறுகிய இருதயம்

மற்ற அவயவங்களைப்பற்றிய உணர்வு என்பது வாழ்க்கையில் எல்லாவற்றையும்போல வித்திடப்பட வேண்டிய ஒன்று. இயற்கையாகவே ஆதாமின் மக்கள் சுயத்தை மையமாகக்கொண்டு வாழ்பவர்கள். சிறுபிள்ளையிடம் ஒரு பொம்மையைக் கொடுத்தால் அந்தப் பொம்மையை அவர்கள் இன்னொரு பிள்ளைக்கு விளையாடக் கொடுக்க மாட்டார்கள். இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அது ஆதாமின் மக்கள். ஆதாமின் சுபாவம். தன்னலத்தை சுயநலத்தை மையமாய்கொண்டு, இயற்கையாக வாழ்வது. ஆனால், கிறிஸ்துவின் சரீரம் அதை உடைக்கிறது. தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை நம் நன்மையை மையமாய்க்கொண்டு வாழ்கிற வாழ்க்கையல்ல; பிறருடைய நன்மையைப்பற்றிய உணர் வுள்ளவர்களாய் இருக்கின்ற ஒரு வாழ்க்கை. ஆகவே, மற்ற அவயவங்களைப்பற்றிய உணர்வை நாம் வித்திட வேண்டும். ஒன்று சொல்கிறேன். தேவன் நம்மை ஒரு சில அவயவங்களோடு தொடர்பும், உற

வும் படுத்தியிருக்கும்போது நாம் அந்த அவயவங்களைக்குறித்து “எனக்கு எந்தவொரு உணர்வோ அல்லது எண்ணமோ அல்லது அக்கறையோ இல்லை,” என்றால் என் வாழ்க்கையிலே அதன் விளைவாக ஒரு பாடும், துன்பமும் நடைபெறும்.

தேவனுடைய மக்களை அச்சுறுத்தி, ஏதோவொன்றைச் செய்யவைப்பது ஒருநாளும் தேவனுடைய வழியல்ல. “தசமபாகம் கொடுக்காவிட்டால் உனக்கு வேலை கிடைக்காது; தசமபாகம் கொடுக்கவில்லையென்றால் உன் சம்பாத்தியத்தையெல்லாம் மருத்துவரிடம் கொடுப்பாய்,” என்று பயமுறுத்துவது தேவனுடைய வார்த்தைக்கும், தேவனுடைய இருதயத்துக்கும் முற்றிலும் முரணானது. “தேவனை உங்கள் பொருளால் கனம்பண்ணுங்கள். ஏழை எளிய மக்களுக்கு உங்கள் இருதயங்களை விசாலமாய்த் திறந்து வையுங்கள். அதற்குரிய ஆசீர்வாதத்தை தேவன் தருவார்,” என்று தேவனுடைய வார்த்தை கூறுமே தவிர, “நீ கொடுக்கவில்லையென்றால் மருத்துவமனைக்குக் கொடுப்பாய். தமிழில் ஒரு பழமொழி உண்டு. வாணியனுக்குக் கொடுக்காதவன் வைத்தியனுக்குக் கொடுப்பான். நான் அதை மாற்றிச் சொல்கிறேன். தேவனுக்குக் கொடுக்கவில்லையென்றால் அதாவது பாஸ்டருக்குக் கொடுக்காதவன் வைத்தியருக்குக் கொடுப்பான்,” என்று சொல்வது தேவனுடைய குணத்திற்கும், தேவனுடைய இருதயத்திற்கும் முரணானது.

பிலிப்பியர் 2ஆம் அதிகாரம் (4 ஆம் வசனத்திலே) “அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். கணவன் மனைவிக்கானவைகளை நோக்குவானாக. மனைவி கணவனுக்கானவைகளை நோக்குவாளாக. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கானவைகளை நோக்குவார்களாக. பிள்ளைகள் பெற்றோர்களுக்கானவைகளை நோக்குவார்களாக. சகோதரர்களாகிய நாம் மற்ற சகோதர சகோதரிகளுடைய நலனை நோக்குவோமாக. அதே அதிகாரத்திலே தீமோத்தேயுவை பவுல் ஒரு எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். “உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை”. மற்றவர்கள் தங்கள் காரியங்களைக்குறித்தே தேடுகின்றார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குரியவைகளைத் தேடவில்லை. தங்கள் காரியங்களைப்பற்றித் தேடுகிறார்கள். அவர் தேவனுடைய பிள்ளைகளைப்பற்றி சொல்லுகிறார்.

தேவனுடைய மக்களுடைய நலனைக்குறித்து, வாழ்க்கையைக்குறித்து உண்மையான அக்கறையுள்ளவர்கள் மிகக் குறைவு. அவர்கள் எப்படி கிறிஸ்துவை வாழ்கிறார்கள், எப்படி கிறிஸ்துவால் வாழ்கிறார்கள், எப்படி கிறிஸ்துவை மற்றவர்களுக்குப் பரிமாறுகின்றார்கள் என்று அவர்களைக்குறித்த உண்மையான அக்கறையுடையவர்கள் மிக மிக அரிது. நம் நன்மையைக்குறித்து நாம் மிகத் தீவிர அக்கறையுள்ளவர்களாய் இருப்பது எளிது. பிறருடைய நன்மையைக்குறித்து நாம் சற்றேனும் அக்கறையுள்ளவர்களாய் இருப்பது மிகவும் அரிது. இது வீழ்ந்துபோன ஆதாமின் சுபாவம், என் சுபாவம், உங்களுடைய சுபாவம்.

ஆகவே, நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இந்தக் காரியத்திலே நம்மைக் கையாளுவதற்கு சிலுவையைப் பிரயோகிப்பதற்கு நாம் திறந்திருக்க வேண்டும். 2 கொரிந்தியர் 6ஆம் அதிகாரத்தில் (11-13 வசனங்கள்), “கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது. எங்கள் இருதயம் விரிவாய்த் திறந்திருக்கிறது. அதுபோல உங்கள் இருதயத்தையும் விரிவாய்த் திறவுங்கள். எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது. அதற்குப் பதிலீடாக நீங்களும் பூரிப்பாகுங்கள். எங்கள் உள்ளம் உங்களைக்குறித்து நெருக்கமடையவில்லை. உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கமடைந்திருக்கிறது. எங்கள் இருதயம் திறந்திருக்கிறது. ஆனால், உங்கள் இருதயம் மிகவும் சுருங்கியிருக்கிறது (குறுகியிருக்கிறது),” என்று கொரிந்தியருக்கு பவுல் எழுதுகிறார்.

குறுகின இருதயம் அல்லது சுருங்கின இருதயம் என்றால் என்ன பொருள்? நான், என் மனைவி--சில சமயங்களில் என் மனைவியைப்பற்றிகூட நான் யோசித்துப் பார்ப்பதில்லை-என் வேலை, என் மகிழ்ச்சி, என் வசதி ஆகியவைகளைப்பற்றியே நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் என்றால் என் இருதயம் குறுகின இருதயம். நான், என் மனைவி, என் கணவன், என் பிள்ளைகள், என் வேலை என என்னோடு தொடர்புடைய காரியங்களைப்பற்றி நினைத்துப்பார்க்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் நேரம் காலம் தெரியாமல் மென்பொருள் தொழில் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு நான் ஒரு காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

## உலகப் பார்வோன்களும், செங்கல் சுடுதலும்

24 மணிநேரமும் 7 நாட்களும் நாம் பார்வோனுக்கு செங்கல் சுட்டுக்கொடுத்தாலும் அவன் "சபாஷ்" என்று சொல்லமாட்டான். அவன் வாரத்தின் 8 நாட்களும், ஒரு நாளில் 25 மணி நேரமும் அவனுக்கு செங்கல் சுட்டுக்கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பான். அப்படியே சுட்டுக்கொடுத்தாலும் அவன் நம்மைப் பாராட்ட மாட்டான். நம்மைக்குறித்த அறிக்கையில் "இன்னும் முன்னேற்றம் தேவை; இன்னும் அதிக செங்கல்களும், தரமான செங்கல்களும் நீ சுட வேண்டும்" என்றுதான் சொல்வானேதவிர, "ஓ! இல்லை. நீ 6 நாட்கள் செங்கல் சுட்டால் போதும். 8 மணி நேரம் செங்கல் சுட்டால் போதும்," என்று சொல்லுகிற ஒரு பார்வோனை நான் இதுவரைப் பார்த்தில்லை; இனிமேலும் பார்க்கப்போவது இல்லை.

ஒரு பக்கம், இந்தப் பூமியிலே நமக்குத் தரப்படுகின்ற வேலைக்கு நம் எஜமான்களுக்கு நாம் உத்தம மாய் இருக்க வேண்டும். இன்னொரு பக்கம், எஜமானுக்குப்பின்னால் இந்த உலகத்தின் அதிபதியாகிய ஒரு பார்வோன் இருப்பான். அவன் இந்த எகிப்தை நாம் ஆராதிக்க வேண்டும் என்று நினைப்பான். நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து "என் கடவுள் என் வேலை" என்று மக்கள் வேலையை கடவுளைப் போல ஆராதிப்பதற்கு அவன் தூண்டுவான். நம் வேலையில் உண்மையாய் இருப்பதற்கும், வேலையை ஆராதிப்பதற்கும் இடையே தெளிவான வேறுபாடு உண்டு. அந்த வேறுபாட்டை நாம் இனங்கண்டு என் றைக்கு, "இந்த உலகத்தின் வேலையை நாம் ஆராதிக்க வேண்டும். ஆராதித்தால்தான் இந்த உலகத் தில் நமக்கு உயர்வு வரும்," என்கிற எண்ணம் வருகிறதோ அன்று நாம் அதை சிலுவையினால் கையாள வேண்டும். "கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி. ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்" (சங். 75:6, 7). நம்மை உயர்த்துபவர் நம் மேலதிகாரி இல்லை, நம் கர்த்தர். எட்டு மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. கூடுதலாக ஒருமணி நேரம் கொடுப்பது என் இரக்கம், கிருபை; கட்டாயத்தின்பேரில் நான் செய்வதல்ல. ஆகவே, "நான் என் எஜமானுக்கு உண்மையாயிருக்க வேண்டும், உத்தமமாய் இருக்க வேண்டும்" என்பதற்காக 8 மணி நேரத்திற்குப்பதிலாக 16 மணி நேரம் வேலைசெய்ய வேண் டிய அவசியம் இல்லை. உங்கள் ஞானத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் வெட்டுவெடுக்கென்று 8 மணி நேரம் ஒரு நிமிடம் ஆன உடனே, "8 மணி நேரம்தான் வேலை செய் வேன்," என்று சொல்ல வேண்டாம். அதற்காக 12 மணிநேரம், 13 மணிநேரம், 14 மணிநேரம் என்று வழக்கமாகக் கொடுப்பதைகுறித்து நிச்சயமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமக்குச் சம்பளம் தருவது உலகத்து பார்வோனா அல்லது நம் கர்த்தரா? இதே சம்பளத்தை கர்த்தர் தந்து கூடுதலாக ஒரு மணி நேரம் வேலைசெய்யச் சொன்னால் நாம் செய்வோமா?

இரண்டு எஜமான்கள் இருக்கிறார்கள். ஒரு எஜமான் சட்டம் போட்டு 8 மணிநேரத்திற்குப்பதிலாக 12 மணி நேரம் வேலைசெய்ய வேண்டும் என்று சொல்லுகிறான். இன்னொரு எஜமான் இயேசுகிறிஸ்து. இந்த எஜமான் கொடுத்த வேலையைச் செய்யவில்லை என்றால் இவர் என்ன பெரிய நடவடிக்கை எடுத்துவிடப் போகிறார் என்று நாம் நினைக்கிறோம். அவர் எப்போதுமே நல்ல எஜமான். "இன்றைக்குச் செய்யவில்லையென்றால் நாளைக்குச் செய்துவிடு," என்று சொல்லுவார். "நாளைக்குச் செய்யவில்லை யென்றால் நாளை மறுநாள் செய்துவிடு," என்று சொல்லுவார். ஆனால், முதல் எஜமான், "இன்றைக்கு வேலையை முடித்தாக வேண்டும்; deadline முடித்து delivery முடித்து deployment முடித்து testing முடித்து report எழுதி எல்லாவற்றையும் முடித்தபிறகு நீ வீட்டுக்கு போனால் போதும்," என்று சொல் வான். இந்த எஜமான் ரொம்ப நிஜமானவராக நம் கண்களினால் நிறைந்தவராக இருக்கிறார். ஆனால், அந்த எஜமான் அந்த அளவுக்குக் கண்கள் நிறைந்தவராக இல்லை. அவர் ஒவ்வொருநாளும் சாயங் காலம் வந்து, "நீ இன்றைக்கு என் வேலையை முடித்தால்தான் தூங்கலாம்," என்று கையிலே பிரம் போடு நின்றால் அந்த எஜமான் ரொம்ப கண்கள் நிறைந்தவராக இருப்பார். அந்த எஜமான் நம்மை Time sheet fill பண்ணச் சொல்வதில்லை. சில மென்பொருள் நிறுவனங்களில் spreadsheet fill பண்ணுவதே அவர்களுடைய தொழில். எப்போதாவது program எழுதுகிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

## பணிவிடை

இது முதலாவது. நம் இருதயத்தைத் திறந்து தேவனுடைய மக்களைக்குறித்துச் சிந்திக்க வேண்டும்; அவர்களைக்குறித்துச் சிந்திப்பதற்கு நாம் நம் இருதயத்தை விரிவாக்க வேண்டும். சிந்திப்பதற்கு ஆள்

இல்லாததால் துன்புறுகின்ற தேவனுடைய மக்கள் உண்டு. அவர்கள் பாடுபடுவார்கள். அப்போது அந்தப் பாடு நம்மையும் பாதிக்கும். நாம் தப்பித்துவிடலாம் என்று நினைக்கக் கூடாது. தேவனுடைய மக்களைக் குறித்து அக்கறையும், கரிசனையும் கொண்டு, நாம் நான்குபேர் சேர்ந்து இந்தப் பணிவிடையை, இந்த ஊழியத்தை, இந்தச் சேவையை தேவனுடைய பிள்ளைகளுக்குச் செய்திருக்க வேண்டும். நாம் செய்யாததினால் அவர்கள் துன்புறுகிறார்கள் என்றால் அதன் விளைவாக அவர்கள் படுகிற பாடு நம்மையும் பாதிக்கும் என்று *1* கொரிந்தியர் *12*ஆம் அதிகாரம் சொல்லுகிறது. "ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும்கூடப் பாடுபடும்". நாம் ஒருசில பணிவிடைகளைச் செய்தால் அவர்கள் கொஞ்சம் விடுவிக்கப்படுவார்கள்.

பணிவிடை என்று சொல்லும்போது இரண்டு வாரத்திற்குமுன் நாம் எல்லாரும் பாண்டிச்சேரிக்குச் சென்று சகோதர சகோதரிகளைப் பார்த்து வந்தது பணிவிடையா? அது ஊழியமா இல்லையா? நாம் அங்கு போய் பெரிதாக நாம் என்ன செய்துவிட்டோம்? போய் செய்தி கொடுத்தோமா அல்லது தனியாக பாட்டுப் பாடினோமா? நீங்கள் தனியாக பாட்டுப் பாடவேண்டாம், செய்தி கொடுக்கவும் வேண்டாம். அந்தப் பரிசுத்தவான்களைச் சந்திப்பது நாம் அவர்களுக்கு செய்கின்ற பணிவிடை.

*2* தீமோத்தேயு *1*ஆம் அதிகாரம் *16*ஆம் வசனத்தில் ஒநேசிப்போருவைப்பற்றி பவுல் எழுதுகிறார். "ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக. அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான். என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை. அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்". அவன் பவுலை இளைப்பாற்றி, அவரை உடனே சிறைச்சாலையிலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு வரவில்லை. ஒநேசிப்போரு செய்த சேவை என்னவென்றால் பவுல் சிறைச்சாலையில் கட்டுண்டிருந்தபோது அவரைத் தேடிக் கண்டுபிடித்துச் சந்தித்தார். நாம் பிறரைக்குறித்த எண்ணமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## 2. பிறரைப்பற்றிய பொறுப்புகள்

இரண்டவாவது நான் சொன்னேன்: நமக்குப் பிறரைப்பற்றிய பொறுப்புகள் உண்டு. *2* தீமோத்தேயு *4*ஆம் அதிகாரம் "உன் ஊழியத்தை நிறைவேற்று" (வ.*5*). என் ஊழியம் "பாடுகிற ஊழியம், ஆடுகிற ஊழியம், பிரசங்கம்பண்ணுகிற ஊழியம், அந்த ஊழியம், இந்த ஊழியம்," என்று நான் நினைக்கவில்லை. ஆனால், பிறருக்கான பொறுப்புகளை தேவன் தரவில்லை என்று நம்மில் யாரும் சொல்ல முடியாது. நீங்கள் எவ்வளவு இளைஞனாக இருந்தாலும் சொல்ல முடியாது. எவ்வளவு பரபரப்பான வேலைப்பளு உள்ளவர்களாக இருந்தாலும், "தேவனுடைய மக்களுக்காக அல்லது தேவனை அறியாதவர்களுக்காக எனக்கு தேவன் எந்தப் பொறுப்பும் தரவில்லை," என்று நம்மில் யாரும் சொல்ல முடியாது.

## ஒரு தாலந்து பணிவிடை

மத்தேயுவிலே இந்த உவமை நமக்குத் தெரியும். தேவன் ஒரு தாலந்துகூட கொடுக்காத எந்த நபரும் தேவனுடைய குடும்பத்திலே இல்லை. "தேவன் எனக்கு எந்த வேலையும் தரவில்லை," என்று ஒரு நபர்கூட தேவனுடைய குடும்பத்தில் சொல்ல முடியாது. அதுவும் மத்தேயுவிலேதான் வருகிறது. பதினோராம் வேளையிலே போய் திராட்சைத்தோட்டத்தின் எஜமான் ஒரு சிலரைப் பார்க்கிறார். அப்போதும் சிலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். "நீங்கள் வேலைக்குப் போகவில்லையா?" என்று கேட்கிறார். "எங்களுக்கு யாரும் வேலை தரவில்லை" என்று அவர்கள் சொன்னார்கள். இந்த வார்த்தைகள் ரொம்பப் பிரபலமாக இருக்கிறது... "எங்களுக்கு யாரும் வேலை தரவில்லை". யாரும் ஓடி வந்து உங்களுக்கு வேலை தரமாட்டார்கள். அப்போது அந்தத் திராட்சைத்தோட்டத்தின் எஜமான், """நீங்கள் ஏன் சும்மா நின்றுகொண்டிருக்கிறார்கள்? நீங்களும் போய்த் திராட்சைத்தோட்டத்தில் வேலை செய்யுங்கள். உங்களுக்கும் நியாயமானதை நான் தருவேன்," என்று சொன்னார். ஆண்டவராகிய இயேசு "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்," (யோவான் *4:35*) என்று கூறினார். விளைந்திருக்கிறது அல்லது முதிர்ந்திருக்கிறது. "வேலை இல்லை" அல்லது "வேலை வருவதற்கு இன்னும் நான்கு மாதங்கள் ஆகும்" அல்லது "நான்கு வருடங்கள் ஆகும்" அல்லது "எனக்கு எந்த வேலையும் இல்லை" என்று யாரும் சொல்ல முடியாது.

திறமைசாலிகளெல்லாம் 9 மணிக்கு வேலைக்குப் போனார்கள்; 12 மணிக்கு வேலைக்குப் போனார்கள்; 3 மணிக்கு வேலைக்குப் போனார்கள். இப்போது மணி என்ன ஆயிற்று? 11ஆம் மணி வேளை என் றால் எத்தனை மணி? யூதர்களுடைய நாளேட்டின்படி 6ஆம் மணி வேளை என்றால் 12 மணி. 6ஆம் மணி வேளைக்கு என்றால் 12 மணிக்குப் போய் சிலரை வேலைக்குக் கொண்டுவருகிறார்; 9ஆம் மணி வேளைக்கு என்றால் மதியம் 3 மணிக்குப் போய் சிலரை வேலைக்குக் கொண்டுவருகிறார்; 11ஆம் மணி வேளைக்கு என்றால் சாயங்காலம் 5 மணிக்கு, எல்லாரும் வேலை முடிந்து வீட்டுக்குப் போகிற நேரத்தில், சிலரை வேலைக்குக் கொண்டு வருகிறார்.

சகோதரர்களே, "தேவனுடைய வீட்டிலே வேலை எதுவும் இல்லை," என்று நினைக்காதீர்கள், சொல்லா தீர்கள். மற்றவர்களுக்கு எதாவது வேலை செய்ய முடியுமா என்று பாருங்கள். சுற்றி உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள். "சுத்தம் செய்வது, துடைப்பது" என்று சொல்லவில்லை. ஆனால் அதைச் சொல்லாமலும் இருக்க மாட்டேன். தேவனுடைய மக்கள் எல்லாரைப்பற்றியும், குறைந்தபட்சம், சிலரைப் பற்றிய பொறுப்புகளையாவது தேவன் தருவார்; சில பொறுப்புகளைத் தருவார்.

ஒரு தாலந்து வாங்கினவன் தன் தாலந்தை வாங்கிக்கொண்டு போய் மண்ணிலே புதைத்து வைத்து விட்டான். "இரண்டு தாலந்தும், ஐந்து தாலந்தும் உள்ளவர்களுக்குப் பொறுப்பு உண்டு. ஒரு தாலந்து உள்ளவர்களுக்கு பொறுப்பு இல்லை. நான் காலையிலே 6 மணிக்கு வேலைக்குப் போகிறேன். இரவு 10 மணிக்குத்தான் வீட்டிற்கு வருகிறேன். அதனால் மற்றவர்களுக்குப் பொறுப்பு உண்டு; எங்களுக்குக் கிடையாது," என்று யாரும் சொல்ல முடியாது.

எனக்கு பொறுப்பு உண்டு என்றால் உங்களுக்கும் பொறுப்பு உண்டு. அவரவர்களுடைய கிருபைக்குத் தக்கவண்ணம், அவரவர்களுடைய வளர்த்திக்குத் தக்கவண்ணம் எல்லாருக்கும் பொறுப்பு உண்டு. இது என் இரண்டாவது குறிப்பு.

முதல் குறிப்பு, பிறரைப்பற்றிய எண்ணம். இரண்டாவது குறிப்பு, பிறரைப்பற்றிய பொறுப்பு. தயவுசெய்து நீங்கள் ஏமாந்து போகக்கூடாது. "மற்றவர்களைப்பற்றி எனக்கு எந்தப் பொறுப்பும் இல்லை," என்கிற ஒரு பொய்யான வாதத்தில் நாம் வீழ்ந்துவிடக் கூடாது. மற்றவர்களைப்பற்றி நமக்கு பொறுப்பு உண்டு. நம் பெற்றோர்கள், நம் பிள்ளைகள், கணவன் மனைவி, தேவனுடைய குடும்பத்திலே தேவனுடைய பிள்ளைகள் என எல்லாரையும்பற்றிய பொறுப்பு உண்டு.

### 3. பிறருக்கான கொடைகள்

மூன்றாவது, கொடைகள். தேவன் பொறுப்புகளைத் தரும்போது, அந்தப் பொறுப்புகளை நிறைவேற்று வதற்குரிய திறமைகளையும் நமக்குத் தருவார். "பரிசுத்த ஆவியினுடைய அநுக்கிரகம், வெளியாக்கம் அல்லது செயலாக்கம் அல்லது கொடைகள் அவனவனுடைய பயனுக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது" (1 கொரி. 12:7) என்று பவுல் சொல்லுகிறார்.

### சார்ந்து வாழ்வது தேவனுடைய திட்டம்

நாம் ஏன் ஒருவரையொருவர் சார்ந்து வாழ வேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருக்கிறார்? தேவனுடைய நிறைவை ஒரு தனி மனிதனுக்குள் ஒருநாளும் தேவன் வைக்க முடியாது. ஏனென்றால், கிறிஸ்து மகா பெரியவர், மட்டற்றவர். ஆனால், மனிதர்கள் எல்லாரும் மிகச் சிறியவர்கள். நாம் மிகுந்த மட்டுக்குரிய வர்கள். ஆகவே, தேவனுடைய பரிபூரணத்தை, கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய பரிபூரணத்தை, ஒரு மனிதனுக்குள் தேவன் தந்துவிட முடியாது. ஆகவே, கிறிஸ்துவினுடைய அளவில்லாத பரிபூரணத்தை வெளிக்காண்பிப்பதற்கு அவருக்கு பலகோடி அல்லது பல்லாயிரம் தேவனுடைய மக்கள் தேவை. எனக்கு கிறிஸ்துவின் வளங்கள் அல்லது பரம வளங்கள் தேவை என்றால் ஒருவேளை எனக்கு அதை நேரடியாகப் பெற முடியாது. தேவன் இன்னொரு பரிசுத்தவான் மூலமாக கிறிஸ்துவின் வளத்தை எனக் குப் பரிமாறலாம். இவருக்குத் தேவையான கிறிஸ்துவின் வளத்தை என்மூலமாக தேவன் பரிமாறலாம். இப்படி தேவனுடைய மக்கள் ஒருவரையொருவர் சார்ந்து, தொடர்புகொண்டு, உறவுகொண்டு வாழ வேண்டிய ஒரு திட்டத்தை தேவன் அமைத்திருக்கிறார். நம்மை அடிமைப்படுத்துவதற்காக அல்ல. யாரை யுமே சார்ந்து வாழாமல், ஒரு குகையிலே நிறைவான வாழ்க்கை தன்னிறைவாக இருந்தால் எவ்வளவு

நன்றாக இருக்கும்! இல்லையா? அது நன்றாக இருக்காது. நாம் கிறிஸ்துவினுடைய பரிபூரணத்தை இழந்துவிடுவோம்.

எனவே, பரிசுத்த ஆவியானவர் கொடைகள் தருவது எதற்காக? அவர் எனக்குக் கொடைகள் தரும் போது, இராத்திரியிலே ஒரு கனவில் வந்து, "அருமையான மகனே, மகளே! உனக்கு நான் இந்தக் கொடையைத் தந்திருக்கிறேன். நாளை முதல் உனக்கு மேடையைத்தவிர தரையிலே கால் பாவாது," என்று அவர் சொல்வதில்லை.

## புதிய ஏற்பாட்டில் கொடைகள்

1 கொரிந்தியர் 12, ரோமர் 12, எபேசியர் 4, 1 பேதுரு 4 ஆகிய இந்த நான்கு அதிகாரங்களிலே கொடைகளைப்பற்றி எழுதியிருக்கிறது.

ஒநேசிப்போருக்கு தேவன் கொடைகளைக் கொடுத்தார். என்ன கொடை என்றால் பொறுமையாக பவுலை தேடிக் கண்டுபிடிக்கிற கொடை. நான் ரொம்ப சாமர்த்தியமாக இதைக் கொடை என்று சொல்வ தாக நீங்கள் நினைக்கலாம். இல்லை. நீங்கள் இந்த நான்கு பகுதியையும் வாசியுங்கள். உதவிகள் என் பது ஒரு கொடை; நிர்வாகம் என்பது ஒரு கொடை; காரியங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குசெய்வது என்பது ஒரு கொடை.

இந்தக் கூடுகையினுடைய பொறுப்பை சிலர் எடுத்துக்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து இராத்திரி கனவிலே தோன்றி சொன்னாரா என்று நீங்கள் கேட்கலாம். "என் அருமையான மகனே, மகளே! சகோ தரனையும் சகோதரியையும் நான் அழைத்த ஊழியத்திற்காகப் பிரித்துவிடுங்கள்," என்று அப்போஸ்தலர் 13ஆம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினதுபோல திருவுளம்பற்றினாரா? திருவுளம் பற்றவில்லை. முன்வந்து அவர்களே அந்தப் பொறுப்பை எடுக்கலாம் அல்லது சில சகோதரர்கள், "சகோதரனே, சகோதரியே! உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு கிருபை இருப்பதை நான் பார்க்கிறேன்," என்று சொல்லலாம். அதென்ன அப்படிப்பட்ட கிருபை! ஒரு மனிதனுக்கு எப்படிப்பட்ட கிருபை இருக் கிறது என்பதை அவனுடைய வாழ்க்கையைவைத்துக் கண்டுபிடிக்கலாம்.

சகோதரனுடைய சரித்திரத்தை நீங்கள் கொஞ்சம் பார்க்க வேண்டும். அந்த சரித்திரத்தைப் பார்த்தபிறகு இந்த மனிதன் இப்படிப்பட்ட வேலைக்குத் தகுதியானவனா இல்லையா என்று நீங்கள் சொல்வீர்கள். எல்லாப் பொறுமையோடும், எல்லா சகிப்புத்தன்மையோடும், எல்லாப் பாடுகள் துன்பங்கள் மத்தியிலே ஒரு மனிதன் நிற்க வேண்டும். ஒரு தேவனுடைய குடும்பம் ஒரு கூடுகையை நடத்துவது ஒரு பொறுப்பு. அதிலே தேவனுடைய வார்த்தைக்கு சிலர் பொறுப்பு எடுக்க வேண்டும்; பாடல்களுக்கு சிலர் பொறுப்பு எடுக்க வேண்டும்; பந்திக்கு சிலர் பொறுப்பு எடுக்க வேண்டும்; தேவனுடைய மக்கள் சிலர் வரமுடிய வில்லையென்றால் வரமுடியாத தேவனுடைய மக்களைச் சந்திப்பதற்கு சிலர் பொறுப்பு எடுக்க வேண்டும்.

உங்கள் கண்களை நீங்கள் ஏறெடுத்துப் பார்த்தால் வேலைகள் நிறைய இருக்கிறது. ஒரேவொரு ஆள் எல்லா வேகைளையும் செய்தால் ரொம்ப அழுத்தமாக இருக்கும். நாமெல்லாரும் இந்த வேலைகளைப் பகிர்ந்துகொண்டு செய்வோமென்றால் அந்த வேலைகளை நாம் நேர்த்தியாகச் செய்ய முடியும். நாம் எல்லாரும் வேலைக்குப் போகிறோம் என்பதற்காக நம் சேவையினுடைய தரம் தாழ்வாக இருக்க வேண் டிய அவசியம் இல்லை. முழு நேரமும் தேவனைச் சேவிக்கிற ஒரு மனிதன் எப்படிப்பட்ட தரமான சேவையை--தரமான சேவை என்றால் உண்மையாகவே கிறிஸ்து அக்கறைகொள்வதுபோல அக்கறை கொண்டு பணிவிடை--செய்ய முடியுமோ அதேபோல் தேவனுடைய மக்களாகிய நாம் ஒருவருக்கொருவர் அப்படிப்பட்ட பணிவிடையைச் செய்ய வேண்டும். ஆகவே, பரிசுத்த ஆவியினுடைய கொடைகளைப் பிறருடைய பயனுக்காகக் கொடுக்கின்றார்.

## கொடையை அனல்மூட்டி எழுப்புதல்

எடுத்தவுடனே கொடை அப்படியே dramaticகாகச் செயல்படாது. "இதினிமித்தமாக நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை (கொடையை) நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" (2 தீமோ. 1:6) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்.

தேவன் கொடையையே தந்தாலும் நாம் அதை அனல்மூட்டி எழுப்ப வேண்டும். "தேவன் கொடை தந்துவிட்டார்; நான் உட்கார்ந்துவிடுவேன்," என்று வைத்துக்கொள்வோம். அந்தக் கொடை ஒன்றுமில்லா மல் போய்விடும். எப்படி அடுப்பை ஊதி ஊதி அனல் மூட்டுகின்றார்களோ அதுபோல தேவனுடைய கொடையைப் பயன்படுத்தி பயன்படுத்தி (அனல்மூட்டி) எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொன்றும் சொல்ல வேண்டும். ஆவியின் கொடைகள் பிறருக்காக. நாம் கூடிவருவது நமக்காக அல்ல; கூடிவருவது யாருக்காக? பிறருக்காக. 1 கொரிந்தியர் 14ஆம் அதிகாரத்தை நீங்கள் வாசித்துப் பாருங்கள். "நீ நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் கட்டப்படவில்லையே. நீ நன் றாய் அந்நிய பாஷைகளைப் பேசுகிறாய்; ஆனால், மற்றவன் கட்டப்படவில்லையே". நாம் கூடிவருவது எதற்காகவென்றால் பிறரைக் கட்டுவதற்காக. கட்டுவது என்றால் சேர்ப்பது என்று பொருள். "நீ நன்றாய் ஜெபிக்கிறாய். நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணுகிறாய். நன்றாய் அந்நிய பாஷை பேசுகிறாய். நன்றாய்ப் பாடுகிறாய். ஆனால் மற்றவன் கட்டப்படவில்லையே. மற்றவர்கள் கட்டப்படும்படியாக நீங்கள் எல்லா வற்றையும் செய்யுங்கள்". கட்டப்படுவது என்றால் என்ன? வளர்வது. கிறிஸ்துவோடு ஒன்றாய் இணை வது, கிறிஸ்து உருவாக்கப்படுவது, செயல்படுவது.

தேவனுடைய மக்களுக்குக் குறைகளும் தேவைகளும் உண்டு. மேலோட்டமாய் பார்த்து அந்தக் குறை களை நாம் நிவிர்த்திசெய்துவிட முடியாது. ஒருவனுக்கு நூறு ரூபாய் குறைகிறது. நாம் நூறு ரூபாய் கொடுப்போம். அந்தக் குறை நிறைவாகி விடுமா? உடல்நலம் சரியில்லை. நாம் ஜெபிப்போம். உடனே உடல்நிலை சரியாகி விடுமா? அல்லது ஒரு சின்ன வேலையை நான் செய்துவிடலாம். உடனே அவர் களுடைய எல்லாக் குறைகளும் தீர்ந்துவிடுமா? கட்டப்படுவது என்றால் எல்லாக் குறைகளையும் மிக ஆழ்ந்த விதத்தில் தீர்க்கிறவர் கிறிஸ்து. நாம் பாடுவதாக இருந்தாலும் சரி, ஜெபிப்பதாக இருந்தாலும் சரி, ஸ்தோத்திரிப்பதாக இருந்தாலும் சரி, வார்த்தையைப் பயன்படுத்தவதாக இருந்தாலும் சரி-ஏதோ வொரு விதத்தில் நாம் கிறிஸ்துவை அவர்களுக்குப் பரிமாறுகிறோம். ஆவிக்குரிய விதத்தில் இருந் தாலும் சரி அல்லது இந்த உடலுக்குரிய விதத்தில் இருந்தாலும் சரி--ஏதோவொரு விதத்தில் நாம் கிறிஸ்துவை அவர்களுக்குப் பரிமாறுகிறோம்.

### 4. பிறருக்கான உக்கிராணத்துவம்

நான்காவது, உக்கிராணத்துவம். கடைசியாக உக்கிராணத்துவத்தைப்பற்றிச் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். "உக்கிராணத்துவம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது," *(1 கொரி. 4:2; 9:17)* என்று பவுல் சொல்லுகிறார். இதை நான் கடுமையாகச் சொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து கவனியுங்கள். எதற்காக நாம் இந்த இடத்தில் கூடி வருகிறோம் அல்லது கூடி வாழ்கிறோம்? "எனக்கு வசதிப்படுகிறது; 'நாங்கள் ஊழியம் பண்ணுகிறோம்' என்கிற உணர்வு வேண்டும்; அதனால் நாங்கள் இதைச் செய்கிறோம். அந்த உணர்வு எப்பொழுது வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது நாங்கள் செய்வோம். 'நாங்கள் ஊழியம் பண்ணுகிறோம்' என்கிற உணர்வு எப்போது தேவை இல்லையோ அப்பொழுது நாங்கள் ஊழியம் செய்ய மாட்டோம்," என்றால் அதற்குப் பெயர் உக்கிராணத்துவம் இல்லை.

### உண்மையுள்ள உக்கிராணக்காரன்

ஓர் உணவகத்தில் உணவு பரிமாறுகிறவன் இருக்கிறான். சமையலறையிலிருந்து அவனிடம் பொருளைக் கொடுத்தால் அதைக் கொண்டுபோய் மேஜையில் வைக்க வேண்டியது அவனுடைய உக்கிராணத்துவம், ஒப்புவிப்பு, ஒப்புக்கொடுத்தல்.

என்னைப் பொறுத்தவரை ஞாயிற்றுக்கிழமை இந்தக் கூடுகை உக்கிராணத்துவம். இங்கு தேவனுடைய மக்கள் கூடிவருகிறார்கள். இது மிகவும் விலையேறப்பெற்றது. ஆகவே, நாம் கூடிவர வேண்டும். அவர் களுக்குப் பயனுள்ள ஏதோவொன்றை நாம் கொண்டுபோக வேண்டும். உடலுக்குரிய விதத்திலே, உலகத்துக்குரிய விதத்திலே, ஆவிக்குரிய விதத்திலே, எல்லா விதத்திலும் தேவனுடைய மக்களுக்கு ஏதாவது ஒரு நன்மையை நான் கொண்டுபோக வேண்டும். அது அவர்களைக் கட்டியெழுப்பும்; அவர் களை ஆற்றும்; அவர்களைத் தேற்றும்; அவர்களை ஊக்குவிக்கும்; கிறிஸ்துவை அறியச் செய்யும்; கிறிஸ்துவை அனுபவிக்கச் செய்யும்; அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளே வேர்கொள்ளுவார்கள்; கிறிஸ்துவால்

அவர்கள் நிரம்புவார்கள்; அவர்கள்மூலமாகப் பலருக்கு கிறிஸ்துவானவர் பகிர்ந்துகொடுக்கப்படுவார். அதுதான் கட்டியெழுப்பப்படுதல்.

நானும் இன்னொரு சகோதரனும் ஒரு வேலைசெய்வதாக நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்த வேலையைச் செய்வதற்கு அவர் வந்துவிட்டார். ஆனால், நான் வரவில்லை என்றால் நான் என் உக்கிராணத்துவத்தை செய்யவில்லை என்று பொருள். ஏனென்றால், அந்த வேலையைச் செய்வதற்கு இரண்டுபேர் வேண்டும். எடுத்துக்காட்டாக, மேஜையைத் தூக்குவதற்கு இரண்டு பேராவது வேண்டும். ஒரு பிள்ளையை வளர்ப்பதற்கு குறைந்தது தாய் தகப்பன் என்று இரண்டுபேர் வேண்டும். ஒரு தாய் மட்டும் பிள்ளையை வளர்க்க முடியாது. தாய்க்கு ஒரு உக்கிராணத்துவம் இருக்கிறது. தந்தைக்கு ஒரு உக்கிராணத்துவம் இருக்கிறது. இரண்டுபேரும் சேர்ந்துதான் அந்த உக்கிராணத்துவத்தை நிறைவேற்ற முடியும்.

தமிழில் 'உக்கிராணத்துவம்' என்ற வார்த்தை கஷ்டமாக இருக்கிறது. "stewardship", "commitment". "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவன் என்று காணப்படுவது அவசியம்," (1 கொரி. 4:2) என்று பவுல் சொல்கிறார். ஆகவே, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் பொறுப்பு என்பது voluntary organization voluntary service பண்ணுவதுபோல் நாம் பண்ணுவதில்லை. இதை நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்து நம் எஜமான். நாம் அவருடைய அடிமைகள். அடிமை என்கிற முறையிலே நாம் சேவிக்கிறோம். "நான் ஒன்றும் அவருக்கு சேவிக்க வேண்டிய அவசியம் எல்லாம் கிடையாது. இது நான் அவருக்குக் கொடுக்கிற voluntary service. எனக்கு விருப்பம் இருந்தால் நான் இந்த சேவையை, பணிவிடையை, செய்வேன். எனக்கு விருப்பம் இல்லையென்றால் நான் இந்தப் பணிவிடையைச் செய்ய மாட்டேன்," என்பதல்ல.

### உத்தமமும், உண்மையுமான பணிவிடை

பாடுவது பணிவிடையா, இல்லையா? இசைக்கருவி வாசிப்பது பணிவிடையா? எப்போது பணிவிடை என்றால் தாவீது இசைக்கருவி வாசித்தபோது சவுலிடம் இருந்த தீய ஆவி, அசுத்த ஆவி, ஓடினதாம். அப்படிப்பட்ட இசையாக அது இருக்க வேண்டும். இன்றைக்கு தலைகீழாகமாறிவிட்டது. நான் நினைத்துப் பார்க்கிறேன். இன்றைய இசையைக் கேட்டவுன் வெளியே இருக்கிற அசுத்த ஆவிகள் எல்லாம் உள்ளே ஓடி வருகிறதையும் நான் பார்க்கிறேன். இது கொஞ்சம் நகைச்சுவையாக இருக்கிறது. இது நகைச்சுவை; ஆனால், அது உண்மை. தேவனுடைய மக்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் மைக்கைப் பிடிக்கிற விதம், அவர்களுடைய தாடி, மீசை, முடி. நான் இப்படிச் சொன்னவுடன் சிலர், "நீங்கள் ரொம்ப பிற்போக்குவாதி. பிற்போக்கான மனநிலை உடையவர். நீங்கள் தோற்றத்தைப் பார்த்து முடிவு செய்கிறீர்கள்; அவர்களுடைய மீசை, தாடி, முடி என்று புறம்பான காரியங்களைப் பார்த்து முடிவுசெய்கிறீர்கள். உண்மையிலேயே அவர்கள் உள்ளுக்குள்ளே பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பார்கள்," என்று சொல்லலாம், சொல்வார்கள். சரி, இருக்கட்டும் பார்ப்போம்.

நன்றாய்ப் பாடுவதன்மூலமாய் நாம் தேவனுடைய மக்களைச் சேவிக்கலாம். "நான் பாடுவதினால்தான் கிறிஸ்து அவர்களுக்குள் பெரிதாகக் கட்டியெழுப்பப்பட்டுவிடப் போகிறாரா?" என்று ஏனோதானோவென்று நினைக்க வேண்டாம். இந்த ஒரு கேள்விக்கு பதில் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். "நான் பாடவில்லை என்றால் கட்டியெழுப்பப்படப் போவது இல்லையா? நான் பாடுவது மூலமாகத்தான் கட்டியெழுப்பப்பட போகிறாரா?" இந்த எண்ணம் நமக்குள் உதிக்கிறதா, உதிக்கவில்லையா? அல்லது "பாடுவது அவ்வளவு முக்கியமா, பிரதர்? வாழ்க்கைதானே முக்கியம். பாட்டா முக்கியம்? என்ற எண்ணம் வருகிறதா இல்லையா? இந்த மாதிரி அதி ஆவிக்குரிய சில கருத்துக்களுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பாட்டுதான் எல்லாம் என்று நான் சொல்ல மாட்டேன். சில சமயங்களில் பாட மட்டும்தான் முடியும்.

சிறைச்சாலையிலே பவுலும் சீலாவும் நடுராத்திரியிலே தேவனைத் துதித்துப் பாடினார்கள். சிலபேர் பாடும்போது சிறைச்சாலையின் கதவுகளே திறந்துவிடும் அளவுக்குப் பாட முடியும். "ஆண்டவரே, நாங்கள் பாடும்போது சிறைச்சாலையின் கதவுகள் திறக்க வேண்டும்," என்று ஜெபம் பண்ணிவிட்டு

வரலாம். சரி. உள்ளான சிறைச்சாலைகளும் இருக்கலாம். ஒரு வாக்கியம், ஒரு வார்த்தை, சிலருடைய உள்ளான சிறைக்கதவுகளைத் திறக்கலாம்.

ஒரு பணிவிடையைக்குறித்து, "பிரதர், அது என் வேலையில்லை; அது என் பங்கு இல்லை; அது என் பங்கேயானாலும் என் பங்கு முக்கியமில்லை," என்று சொல்லும்போது உண்மையாகவே நாம் என்ன சொல்லுகிறோம் தெரியுமா? "என்னைப்பொறுத்தவரை அந்த வேலை எனக்கு முக்கியம் இல்லை," என்பதே அதன் பொருள். நன்றாய்க் கவனியுங்கள். "எனக்கு அந்த வேலை முக்கியம் இல்லை," என்று நாம் சொல்ல மாட்டோம். அப்படிச் சொல்வது நல்ல குணம் இல்லை அல்லவா? எனவே, அதற்குப் பதிலாக எப்படிப் சொல்லுவோம் என்றால், "நான் இந்த வேலைக்கு ரொம்ப முக்கியம் கிடையாது பிரதர்," என்று ரொம்ப தாழ்மையாகச் சொல்வோம். இது உண்மையில் தாழ்மையில்லை.

பாடுகிற வேலை இருக்கிறதில்லையா? "பாடுகிற கிருபை எனக்கு இல்லை. அதனால் நான் பாடுவதற்கு முக்கியம் இல்லை பிரதர்," என்று சொல்லும்போது மறைமுகமாக உள்ளான எண்ணம் என்னவென்றால், "என்னைப் பொறுத்தவரை பாடுவது ஒரு முக்கியமான வேலை அல்ல". "நாற்காலி எல்லாம் அடுக்கி வைக்க வேண்டுமே!" என்றால், "என் வேலையை யார் வேண்டுமானாலும் செய்யலாம் பிரதர்" என்று சொல்லலாம். அப்படியல்ல. இவையெல்லாம் இயற்கையான, மாம்சத்துக்குரிய எண்ணங்கள்.

தேவனுடைய வீட்டிலே, "இந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றாவிட்டால் வேறு யாரும் நிறைவேற்ற மாட்டார்கள்," என்பதுதான் உக்கிராணத்துவம். "நான் மட்டுமே இந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியும்".

அப்போஸ்தலர் 6ஆம் அதிகாரத்திலே சீடர்கள் மத்தியிலே பந்திவிசாரணையைப்பற்றி ஒரு நெருக்கடி வருகிறது. உடனே அப்போஸ்தலர்கள் பந்திவிசாரணை செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்கள் பந்திவிசாரணை செய்வார்களா அல்லது தேவனுடைய வார்த்தையைப் போதிப்பார்களா? அப்போது நெருக்கம் வருகிறது. (2, 3, 4 ஆம் வசனங்கள்) "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல," என்று அவர்கள் சொல்கிறார்கள். "ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள். அப்படி என்றால் என்ன அர்த்தம்?

**தன்தன் பொறுப்பை நிறைவேற்றுதல்**

தேவனுடைய வீட்டில் பல பொறுப்புகள் இருக்கும். பந்திவிசாரணை செய்யத்தான் வேண்டும். ஆனால் அதைச் செய்யவேண்டிய, அந்தப் பொறுப்பை எடுக்கக்கூடிய சில தேவனுடைய மக்கள் முன்வர வில்லை என்றால் என்ன செய்வது? அது தேவன் தனக்குக் கொடுத்த பொறுப்பு என்கிற உணர்வு அவர் களுக்கு வரவில்லை என்றால் அதை இன்னொரு சகோதரன்தான் செய்ய வேண்டும். அதனால் வேறொரு பொறுப்பு கெட்டுப்போகும். தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் இப்படிப்பட்ட ஒரு பரம ஞானம், ஒரு ஆவிக்குரிய அறிவு, இருக்குமென்றால் தேவனுடைய வீடு மிகவும் ஆசீர்வாதமான, நன்மைகள் மிகுந்த மகிழ்ச்சியான வீடாக இருக்கும்.

**5. வெகுமதி**

கடைசியாக, வெகுமதி என்கிற ஒரு வார்த்தை சொல்லுகிறேன். நம்முடைய வெகுமதி என்ன? "இந்த உலகத்திலே நீ ஆசீர்வாதமாக இருப்பாய்," என்று சொன்னால் உங்கள் மனம் அப்படியே ரொம்ப குளிர்ந்துவிடும் என்று எனக்குத் தெரியும். நீங்கள் சேவித்தாலும் சேவிக்காவிட்டாலும் நீங்கள் இந்தக் கூடுகைக்குப் பொறுப்பெடுத்து, முதலாவது வந்து கடைசியாகப் போகின்ற பொறுப்பை எடுத்துக் கொள்ளுங்கள். அதுதான் முதல் பொறுப்பு. முதல் நபராக, முதல் குடும்பமாக, வந்து எல்லாரையும் வழி அனுப்பிவிட்டு கடைசியாகப் போகிற பொறுப்பை எடுத்துக்கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் ஆறு நாள் ஓய்வு எடுத்து கொள்ளுங்கள். ஆனால், ஏழாம் நாள் உங்களுக்கு ரொம்ப சுறுசுறுப்பாக இருக்க வேண்டியிருக்கும். நாங்கள்கூட ஒன்றரை மணிக்குப் போய் விடுவோம். இந்த அறை ஞாயிற்றுக்கிழமை யிலே உங்களுக்கு சொந்தம். 2 மணிவரை இருந்துவிட்டு, "பிரதர், நாங்கள் விடைபெறுகிறோம்," என்

றால் எங்களுடைய மற்ற வேலைகளைப் பார்ப்பதற்கு நாங்கள் விடைபெற்றுக் கொள்வோம். மூன்றரை மணிக்குத்தான் இந்த இடத்தைவிட்டு நீங்கள் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும். மூன்றரை மணி வரைக்கும் இருந்து, எல்லாருக்கும் விடை கொடுத்து அனுப்புவது ஒரு பொறுப்பா, இல்லையா? அது கிறிஸ்துவைப் பரிமாறுவதா, இல்லையா? வாசல்வரைப் போய் வழியனுப்புவது, 'களிகூறுங்கள்' என்று சொல்லி வழி அனுப்புவது கிறிஸ்துவைப் பரிமாறுவதா, இல்லையா? நான் இங்கேயே உட்கார்ந்து கொண்டு வழி அனுப்புவது கிறிஸ்துவை பரிமாறுவதல்ல.

அருமையான பரிசுத்தவான்களே, வெகுமதி அதுவல்ல. "என் சம்பத்தை நான் சேர்க்கும் அந்நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்...அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்," (மல். 3:17, 18) என்று கர்த்தர் சொல்லுகிறார். தொடர்ந்து இந்த வாக்கியங்களை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். 2 தீமோத்தேயு 2ஆம் அதிகாரத்தில் பவுல் சொன்னதுபோல, " நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள். கர்த்தர் எல் லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருள்வார்" (வ. 7) ஆமென்.